தினமணி

**நெல் சாகுபடியில் களைகளை எவ்வாறு கட்டுப்படுத்துவது?**

First Published : 30 Sep 2010 01:28:44 PM IST

சங்ககிரி, செப்.29: நெல் சாகுபடியில் நாற்றங்கால் மற்றும் நடவு வயலில் தோன்றும் களைகளை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து சங்ககிரி வேளாண் உதவி இயக்குநர் ப.சௌந்தரராஜன் தெரிவித்துள்ளதாவது:

நெல் நாற்றங்கல்: நெல் நாற்றங்காலில் களைகளைக் கட்டுப்படுத்த ஒரு சென்ட்க்கு பூட்டாகுளோர் 8 மிலி அல்லது தயோபென்கார்ப் 8 மிலி அல்லது அனிலோபாஸ் 5 மிலி என்ற மருந்துகளில் ஏதாவது ஒன்றை விதைத்த 8-ம் நாளில் தெளிக்க வேண்டும்.

பிரிட்டாகுளோர் ப்ளஸ் களைக்கொல்லி சென்ட்டுக்கு 4 மிலி வீதம் விதைத்த 3-ம் நாள் இடலாம். நாற்றங்காலில் நீரை சிறுபடலமாக வைத்து மருந்தை தெளித்த பின்னர் நீர் மறையும் வரை மீண்டும் நீர் பாய்ச்சுதல் கூடாது. மருந்து கலந்த நீரை வடிகட்டுதலும் கூடாது. இந்த முறையில் நாற்றங்காலில் முளைக்கும் களைகளை கட்டுப்படுத்தலாம்.

நெல் நடவு வயல்: களை முளைக்கும் முன் நெல் நடவு வயலில் ஒரு ஏக்கருக்கு பூட்டாகுளோர் ஒரு லிட்டர் அல்லது தயோபென்கார்ப் ஒரு லிட்டர் அல்லது அனிலோபாஸ் 500 மிலி என்ற களைக்கொல்லிகளில் ஏதாவது ஒன்றை நடவு செய்த மூன்று முதல் ஐந்து நாள்களில் தெளித்து, பின்னர் நடவு செய்த 30-35 நாள்களில் ஒரு கைக்களை எடுப்பதன் மூலம் எல்லா வகையான களைகளையும் கட்டுப்படுத்தலாம்.

மணல் பாங்கான நிலங்களுக்கு அனிலோபாஸ் களைக்கொல்லியைத் தவிர்க்க வேண்டும், அல்லது மேற்கூறிய களைக்கொல்லிகளை ஒரு ஏக்கருக்கு 20 கிலோ மணல் என்ற அளவில் கலந்து நடவு செய்த 3-5 நாள்களில் 2.5 செ.மீ அளவு நீரில் சீராகத் தூவ வேண்டும். களைக்கொல்லி தெளித்த பின் இரண்டு நாள்களுக்கு நீரை வயலில் இருந்து வடிக்கவோ அல்லது நீர் பாய்ச்சவோ கூடாது.

இம்முறைகளை கடைப்பிடித்து விவசாயிகள் பலன் பெறுமாறு வேளாண் உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

**மரக்கன்றுகள், பழ மரக்கன்றுகள் உற்பத்தி பயிற்சி**

First Published : 01 Oct 2010 08:02:24 AM IST

நாகப்பட்டினம், செப். 30: நாகையை அடுத்த சிக்கலில் உள்ள வேளாண் அறிவியல் நிலையத்தில் மரக்கன்றுகள் மற்றும் பழ மரக்கன்றுகள் உற்பத்தி பயிற்சி முகாம் அண்மையில் நடைபெற்றது.

வனவியல் துறை இணைப் பேராசிரியர் இரா. ரேவதி, மரக்கன்றுகள் உற்பத்தி குறித்த தொழில்நுட்பங்களை விளக்கி, மரக்கன்றுகள் உற்பத்தி முறை, நடவு மற்றும் பராமரிப்புகள் குறித்து விளக்கினார்.

தோட்டக்கலைத் துறை உதவிப் பேராசிரியர் கோ. மாலதி பழ மரக்கன்றுகள் உற்பத்தி குறித்த தொழில்நுட்பப் பயிற்சி அளித்தார். பழ மரக்கன்றுகளில் ஒட்டுக்கட்டுதல், மொட்டுக்கட்டுதல், விண் பதியன், தொட்டி பதியன் ஆகியன குறித்து ஒளி, ஒலிக் காட்சிகளுடன் விளக்கம் அளித்தார்.

பயிற்சி முகாமுக்கான ஏற்பாடுகளை தொழில்நுட்ப அலுவலர் வீ. ஞானபாரதி செய்திருந்தார்.

**கோவையில் சர்வதேச விவசாய கண்காட்சி:200 நிறுவனங்கள் பங்கேற்பு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 01,2010,04:12 IST

கோவை":பத்தாவது "அக்ரி இன்டெக்ஸ்' சர்வதேச விவசாய கண்காட்சி, கோவை கொடிசியா கண்காட்சி வளாகத்தில் நேற்று துவங்கியது. கொடிசியா சார்பில் நடத்தப்படும் இக்கண்காட்சியில், விவசாய இயந்திரங்கள், சொட்டு நீர் பாசன கருவிகள், விதை, உரம், ரசாயனங்கள், கோழிப்பண்ணை மற்றும் பால் பண்ணை பொருட்கள், கால்நடை, தோட்டக்கலை, பழங்கள் மற்றும் காய்கறி பேக்கிங், பதப்படுத்துதல், பூச்சிக் கட்டுப்பாடு உள்ளிட்ட விவசாயம் சார்ந்த பல்வேறு துறைகள் சார்பில் அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. கோவை வேளாண் பல்கலை துணைவேந்தர் முருகேசபூபதி பேசுகையில், ""இந்த ஆண்டு புதிதாக 743 பயிர் ரகங்கள் வெளியிடப்பட்டுள்ளது. பல்கலை அறிமுகம் செய்துள்ள செம்மை நெல் சாகுபடி திட்டத்தின்படி, நெல் உற்பத்தியை எக்டருக்கு 10 டன் பெருக்கலாம்.""செம்மை கரும்பு சாகுபடி திட்டமும் வெற்றி பெற்றுள்ளது. இத்திட்டத்தின்படி தமிழகத்தில் எக்டருக்கு 249 டன் கரும்பு உற்பத்தி செய்யலாம். விவசாயிகளுக்கு மூன்றாண்டு பட்டப்படிப்பு பல்கலையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. பத்தாம் வகுப்பு முடித்த, 30 வயதுக்கு மேற்பட்ட விவசாயிகள் இப்படிப்பில் சேர்ந்து, வேளாண் தொழில் நுட்பம் உள்ளிட்ட அனைத்து தகவல்களையும் அறிந்து விவசாய உற்பத்தியை பெருக்கலாம்," என்றார்.

ஊரக தொழில் துறை அமைச்சர் பழனிசாமி, காதி மற்றும் கிராமப்புற தொழில் வாரிய அமைச்சர் ராமச்சந்திரன், கலெக்டர் உமாநாத், மேயர் வெங்கடாசலம், கொடிசியா தலைவர் கந்தசாமி, அக்ரி இன்டெக்ஸ் கண்காட்சி சேர்மன் சசிதரன் உள்ளிட் டோர் பங்கேற்றனர். இக்கண்காட்சி அக்.,3ல் நிறைவு பெறுகிறது.

**சொட்டு நீர்ப்பாசனம், பண்ணைக் குட்டைகள் அமைக்க விவசாயிகளுக்கு மானியத்துடன் கடனுதவி**

First Published : 01 Oct 2010 06:41:19 AM IST

திருவள்ளூர், செப் 30: திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்குச் சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர்ப்பாசனம், பண்ணைக் குட்டைகள் அமைக்க மானியத்துடன் கடனுதவி வழங்கப்படும் என்று மாவட்ட ஆட்சியர் டி.பி.ராஜேஷ் தெரிவித்துள்ளார்.

÷இத்திட்டம் பூண்டி, எல்லாபுரம், சோழவரம், கும்மிடிப்பூண்டி, மீஞ்சூர், திருவாலங்காடு, கடம்பத்தூர், திருவள்ளூர், வில்லிவாக்கம் மற்றும் புழல் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகளுக்கு வரும் இரண்டாண்டுகளுக்குச் செயல்படுத்தப்படவுள்ளது. விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்குவது, நீரைச் சேமிப்பது, வேளாண் பணிகளை எளிதாக்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

÷நவீன வேளாண் கருவிகளை இயக்குதல் மற்றும் பராமரித்தல் குறித்தும் பயிற்சி அளிக்கப்படும். விவசாயிகள் பண்ணைக் குட்டை அமைப்பதன் மூலம் நீர்ப்பற்றாக்குறையை சமாளிப்பதுடன், மீன்களை வளர்த்தும் பயன்பெறலாம்.

÷சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க 65 சதவீதமும், பண்ணைக் குட்டைகள் அமைக்க ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு 95 சதவீதமும் அரசு மானியமாக வழங்குகிறது. சொட்டு நீர்ப்பாசனத்தில் விவசாயிகளின் பங்களிப்புப் பணத்தை, வேளாண் தொடக்க கூட்டுறவு வங்கியில் கடனாகப் பெற்றுக் கொள்ளலாம்.

÷இது குறித்து மேலும் விவரங்களை அறிய விவசாயிகள் தங்கள் பகுதியில் உள்ள வேளாண்மை பொறியியல் துறை உதவி செயற்பொறியாளரை நேரில் தொடர்பு கொள்ளலாம் என்று மாவட்ட ஆட்சியர் டி.பி.ராஜேஷ் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## தோட்டத் தொழிலாளர்களுக்கு இலவச புகையில்லா அடுப்பு

First Published : 30 Sep 2010 01:22:40 PM IST

வால்பாறை, செப். 29: எஸ்டேட்டில் பணிபுரியும் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு முடீஸ் அறக்கட்டளை சார்பில், | 39 லடசம் செலவில் இலவச புகையில்லா அடுப்புகள் வழங்கப்பட்டன.

÷வால்பாறையை அடுத்துள்ளது முடீஸ் குரூப் தேயிலைத் தோட்ட நிறுவனம். இங்கு 2,300 தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர். இவர்களுக்கு முடீஸ் அறக்கட்டளை மூலம் பல்வேறு நலத்திட்டங்களை செய்து வருகின்றனர். இத் திட்டங்களின் ஒன்றான அமெரிக்கா நிறுவனம் உற்பத்தி செய்துள்ள புகையில்லா அடுப்பு வழங்கும் நிகழ்ச்சி செவ்வாய்கிழமை நடைபெற்றது.

÷இங்கு பணியாற்றும் அனைத்துத் தொழிலாளர்களுக்கும் இலவச அடுப்பு வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் முடீஸ் அறக்கட்டளை தலைவர் கபூர், தொழில் உறவு அலுவலர் தேவசி, செயலாளர் எபிநேசர், கெஜமுடி எஸ்டேட் மேலாளர் சதுர்வேதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

**கூட்டுறவுத் துறை மூலம் சொட்டு நீர்ப் பாசனக் கடன் ரூ. 3.20 கோடி வழங்க இலக்கு**

First Published : 01 Oct 2010 08:51:01 AM IST

தேனி, செப். 30: தேனி மாவட்டத்தில் கூட்டுறவுத் துறை சார்பில் தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை வங்கிகள் மூலம் சொட்டு நீர்ப் பாசனம் அமைப்பதற்கு விவசாயிகளுக்கு கடன் வழங்க ரூ. 3.20 கோடி வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து கூட்டுறவுத் துறை அலுவலர்கள் கூறியதாவது:

தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை வங்கிகள் மூலம் சொட்டு நீர்ப் பாசனம் அமைக்கும் விவசாயிகளுக்கு 65 சதவீதம் மானிய உதவியுடன் கடன் வழங்கப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தில் அதிகபட்சம் ஒரு ஹெக்டேர் பரப்பளவில் நிலம் வைத்துள்ள விவசாயிகள் பயன் பெறலாம். குறைந்த அளவு நிலம் உள்ள ஒரே பகுதியைச் சேர்ந்த 20 விவசாயிகள் தொகுப்பாகச் சேர்ந்து இந்தத் திட்டத்தில் விண்ணப்பிக்கலாம்.

தோட்டக் கலைத் துறை பரிந்துரையில், காய்கறிப் பயிர்களுக்கும், நில வள, நீர் வளத் திட்டத்தின் பரிந்துரையில் அனைத்துப் பயிர்களுக்கும் சொட்டு நீர் பாசனத்துக்கு மானியக் கடன் வழங்கப்படும். இந்தத் திட்டத்தில் இந்த ஆண்டு கடன் வழங்க ரூ. 3.20 கோடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை ரூ. 66 லட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. ரூ. 1.32 கோடிக்கான கடன் விண்ணப்பங்கள் பரிசீலனையில் உள்ளன.

சொட்டு நீர்ப் பாசனத்துக்கு மானிய உதவியில் கடன் பெற விரும்பும் விவசாயிகள் நிலத்தின் சிட்டா, அடங்கல், குத்தகை ஒப்பந்தப் பத்திரம், வரைபடம், பாஸ்போர்ட் அளவு புகைப்படங்கள், மண் மற்றும் தண்ணீர்ப் பரிசோதனை அறிக்கை, அங்கீகரிக்கப்பட்ட சொட்டு நீர்ப் பாசன நிறுவனத்தின் அறிக்கை மற்றும் மதிப்பீடு ஆகியவற்றுடன் அந்தந்தப் பகுதிகளில் உள்ள தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை வங்கி, கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப் பதிவாளர் அலுவலகம் ஆகியவற்றில் தொடர்பு கொள்ளலாம் என்றனர்.

**நெல் விலையை உயர்த்த விவசாயிகள் வலியுறுத்தல்**

First Published : 01 Oct 2010 07:46:34 AM IST

திருவாரூர், செப். 30: நெல் விலையை உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தினர்.

திருவாரூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது. கூட்டத்துக்கு மாவட்ட ஆட்சியர் எம். சந்திரசேகரன் தலைமை வகித்தார்.

கூட்டத்தில் விவசாயிகள் பேசியது:

கோவிந்தராஜ்: அரசு ஊழியர்களுக்கு அவ்வப்போது அகவிலைப்படி உயர்வு செய்யப்படுவது போன்று, விவசாயிகளுக்கும் நெல் விலையை கட்டுபடியாகும் அளவுக்கு உயர்த்தி வழங்க வேண்டும். தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்களில் உரங்களை கையிருப்பு வைத்துக் கொள்ளாமல், அனைத்தையும் விவசாயிகளுக்கு விநியோகிக்க வேண்டும். வேளாண் விரிவாக்க மையங்களில் பூச்சிக்கொல்லி மருந்துகள் போதுமான அளவுக்கு இருப்பு வைத்து விவசாயிகளுக்கு வழங்க வேண்டும்.

ஜி. சேதுராமன்: அதம்பார் கிராமத்தில் மின் தட்டுப்பாடு அதிகமாக உள்ளது. எனவே, மின் மாற்றிகளை மாற்றி, பழுது நீக்க வேண்டும். வாய்க்கால்கள் தூர்ந்துவிட்டதால் ஆறுகளிலிருந்து வாய்க்கால்களுக்கு நீர் பாயவில்லை.

டி. சந்திரசேகரன்: வேளாண் பல்கலைக்கழகத்தில் வாங்கிய நெல் விதைகளில்கூட 15 முதல் 20 சதம் வரை கலப்பு விதைகள் உள்ளன. வெள்ளை அதம்பாரில் உள்ள நெல் உலர் களம் சேதமடைந்துள்ளது. இதை சீரமைக்க வேண்டும்.

ராமமூர்த்தி: பெரும்பண்ணையூர் கால்நடை மருந்தகத்தில் நிரந்தர மருத்துவர் நியமிக்க வேண்டும். இந்தப் பகுதியில் உள்ள தனியார் வங்கி விவசாயிகளுக்கு தேவையான கடன்களை வழங்குவதில்லை. கடன் வழங்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையெனில், சேங்காலிபுரத்தில் உள்ள வங்கிக்கு எங்களது கிராமத்தை மாற்றம் செய்ய வேண்டும்.

பா. ராமையா: செல்வபுரம் வாய்க்கால் தூர்ந்துவிட்டது. இதனால், இப்பகுதியில் உள்ள விவசாய நிலங்கள் சாகுபடி செய்யப்படாமல் உள்ளன. இதை உடனடியாக இயந்திரம் மூலம் தூர்வார நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பி.எஸ். மாசிலாமணி: கடந்த 2008-ல் ஏற்பட்ட நிஷா புயலில் பாதிக்கப்பட்ட மரைக்காகோரையாற்றில் உள்ள நேமம் வடிகால் பகுதியில் நிரந்தரத் தடுப்பு ஏற்படுத்த வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டு, பணிகள் தொடங்கப்பட்டு, பாதியில் நிறுத்தப்பட்டுள்ளது. இதை விரைந்து முடிக்க வேண்டும். நிபந்தனைகளைத் தளர்த்தி நெல்லை கொள்முதல் செய்ய வேண்டும். தனியாரிடம் விற்பதால் 60 கிலோ மூட்டைக்கு ரூ. 100 வரை விவசாயிகளுக்கு இழப்பு ஏற்படுகிறது.

பி.ஆர். பாண்டியன்: முத்துப்பேட்டை - ஜாம்புவானோடை சாலையில் கோரையாற்றுப் பாலம் புதிதாகக் கட்டப்படவுள்ளது. அதிக மழை பெய்யும் காலங்களில் இந்த ஆற்றில் 11,000 கன அடி

தண்ணீர் வரும். எனவே, இதைக் கருத்தில் கொண்டு தாற்காலிகப் பாலம் அமைக்கப்படுவதை தரை மட்டத்தைவிட உயர்த்திக் கட்ட வேண்டும்.

மின் தேவை அதிகமாகி விட்டதால், பல இடங்களில் மின் மாற்றிகள் பழுதாகின்றன. மின் மாற்றி தட்டுப்பாட்டைப் போக்கி, உடனடியாக மின் மாற்றிகளை தேவையான இடங்களில் பொருத்த வேண்டும்.

நெடுவை ராஜதுரை: தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களில் கடன் தள்ளுபடி பெற்ற விவசாயிகளுக்கு பயிர்க் கடன் வழங்க மறுக்கின்றனர். பயிர் காப்பீட்டுத் திட்டத்தை அனைத்து விவசாயிகளும் பயன்பெறும் வகையில் செயல்படுத்த வேண்டும். கூட்டத்தில் மேலும் விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் பேசினர்.

தினமலர்

**மானிய விலையில் வழங்கப்படும் ஜிப்சம் நெற்பயிருக்கு உபயோகிக்க வேண்டுகோள்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 01,2010,01:46 IST

கிள்ளை : சிதம்பரம், பரங்கிப்பேட்டை மற்றும் பின்னத்தூர் வேளாண்மை விரிவாக்க மையங்களில் மானியத்தில் வழங்கப்படும் ஜிப்சத்தை விவசாயிகள் பெற்று பயன் பெறுமாறு வேளாண் துறை அறிவிறுத்தியுள்ளது.

இது குறித்து வேளாண் உதவி இயக்குனர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு: நெற்பயிரில் ஜிப்சம் அடியுரமாக எக்டருக்கு 500 கிலோ அளவில் இடுவதால் மகசூல் அதிகரிக்கும். மேலும் நாற்றாங்கால் களிமண் அல்லது இறுக்கமான நிலமாக இருந்து நாற்றின் வேர்கள் அறுபடும் நிலை இருப் பின் நாற்றாங்காலில் ஒரு சென்டுக்கு ஒரு கிலோ வீதம் ஜிப்சம் இட்டு ஒரு நாள் விட்டு நாற்றை பறித்தால் வேர் அறுபடாமல் இருக்கும். மேலும் நெல்லுக்கு மேலும் இடும்போது ஐந்து பங்கு யூரியா, நான்கு பங்கு ஜிப்சம் மற்றும் ஒரு பங்கு வேப்பம் புண்ணாக்கு கலந்து மேலுரமிட்டால், தழைசத்து விரயமாவது தடுக்கப்பட்டு பயிர் வளர்ச்சிப் பருவத்தில் தழைச்சத்து கிடைக்க ஏதுவாக இருக்கும். எனவே பரங்கிப்பேட்டை ஒன்றியத்திற்குட்பட்ட சிதம்பரம், பரங்கிப் பேட்டை மற்றும் பின்னத்தூர் வேளாண் மை விரிவாக்க மைங்களில் மானியத்தில் வழங்கப் படும் ஜிப்சங்களை பெற்று விவசாயிகள் பயன் பெறுமாறு தெரிவித்துள்ளார்.

மலிவு விலை பால் கறக்கும் இயந்திர அறிமுக விழா

பதிவு செய்த நாள் : அக்டோபர் 01,2010,03:01 IST

செஞ்சி : திருவண்ணாமலையில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் சார்பில் மலிவு விலை பால் கறக்கும் இயந்திரம் அறிமுக விழா நடந்தது. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம், இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகம் மற்றும் தேசிய வேளாண் புதுத்தறி திட்டம் சார்பில் ஒருங்கிணைக்கப்படாத பால் உற்பத்தியாளர்களை கொண்டு பால் உற்பத்தி தொடர் நிகழ்வு திட்டத்தை அறிமுகம் செய்துள்ளனர். இத்திட்டத்தில் பால் உற்பத்தியில் துவங்கி நுகர்வோரிடம் சென்றடையும் வரை, பாலின் சுத்தம், நுண் கிருமிகளை குறைப்பது, கறவை மாடுகளுக்கு தாது உப்பு குறைபாட்டை கண்டறிந்து, அதை ஈடு செய்து உற்பத்தியின் போதே பாலின் தரத்தை உயர்த்துவது போன்ற நடவடிக்கைகளை செய்கின்றனர். இதில் உயிர் நுண்ணுயிரிகளை கொண்ட பால், தயிர், நறுமண பால், நோய்கள் வராமல் தடுக்கும் மூலிகை பால்களை அறிமுகம் செய்வதுடன், பால் உற்பத்தியாளர்களுக்கு விற்பனை ஆலோசனைகளையும், பாலின் மதிப்பூட்டி தரத்தை உயர்த்தி அதிக வருவாய்க்கு வழி செய்கின்றனர்.

திட்டத்தின் ஆராய்ச்சி, களப்பணிக்கான நிறுவனமாக விழுப்புரம் மாவட்டம் சத்தியமங்கலம் வின்னர் மில்க் நிறுவனத்தை தேர்வு செய்துள்ளனர். திட்டத்தின் ஒரு பகுதியாக சுகாதாரமான முறையில் பால் கறப்பதற்கும், பால் உற்பத்தியாளர்களின் வேலைப்பளுவை குறைக்கவும் மலிவு விலை பால் கறக்கும் இயந்திர அறிமுக விழா திருவண்ணாமலை ஓட்டல் திரிசூலில் நேற்று நடந்தது. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக துணை வேந்தர் முனைவர் தங்கராஜூ தலைமை தாங்கி விழாவை துவக்கி வைத்தார். கால் நடை நல மைய இயக்குனர் முரளி மனோகர் வரவேற்றார். திருவண்ணாமலை கலெக்டர் ராஜேந்திரன் மலிவு விலை பால் கறக்கும் இயந்திரத்தை, வின்னர் மில்க் நிறுவன ஆலோசகர் பொன்னுராஜிடம் வழங்கினார். சென்னை கால்நடை மருத்துவக்கல்லூரி பால்வள அறிவியல் துறை இணை ஆராய்ச்சியாளர் சுரேஷ்சுப்ரமணியன் திட்ட விளக்க உரை நிகழ்த்தினார். கால்நடை ஆராய்ச்சி இயக்குனர் புரு÷ஷாத்தமன் வாழ்த்தி பேசினார். இணை பேராசிரியர் பாஸ்கரன் நன்றி கூறினார். பால்வள அறிவியல் துறை தேசிய வேளாண் புதுத்தறி திட்ட முதன்மை ஆராய்ச்சியாளர் நரேஷ்குமார் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். வின்னர் மில்க் கொள்முதல் மேலாளர் சுரேஷ், நிர்வாக மேலாளர் மோகன், தலைமை கணக்காளர் ரவிச்சந்திரன், பொறுப்பாளர் லட்சுமிநாராயணன், கொள்முதல் மேற்பார்வையாளர்கள் தினகரன், விஜயகுமார், பால் உற்பத்தியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வேளாண் அறிவியல் நிலையம் விவசாயிகளுக்கு வழிகாட்டுகிறது! 42.5 ஏக்கர் பரப்பளவில் கட்டமைப்பு வசதிகள்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 29,2010,23:25 IST

திண்டிவனம் : திண்டிவனம் வேளாண் அறிவியல் நிலையம் வேளாண் சமூகத்திற்கும் கிராம மக்களின் பொரு ளாதார முன்னேற்றத் திற்கும், அவர்களின் வாழ்வாதாரம் உயரவும் தொடர்ந்து சேவையாற்றி வருகிறது. மேலும் கிராமப்புறத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியில் முக் கிய பங்காற்றி வருகிறது.

திண்டிவனம் வேளாண்மை அறிவியல் நிலையம் கடந்த 2004ம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. இந்த நிலையம் தொழில்நுட்ப பரிமாற்றத் தின் மூலம் வேளாண் உற் பத்தி மற்றும் உற்பத் தித்திறனை அதிகரித்தல் மற்றும் சுய வேலை வாய்ப் பினை பெருக்குவதன் மூலம் கிராமப் புறங்களில் பொருளாதார முன்னேற் றத்திற்கு உறுதுணையாக செயல் பட்டு வருகிறது.

விழுப்புரம் மாநில அளவில் 4வது மிகப்பெரிய மாவட்டம். இதன் மொத்த நிலப்பரப்பு 8 ஆயிரத்து 204.68 சதுர கி.மீ., இதில் 8 லட்சத்து 40 ஆயிரத்து 200 ஏக்கர் விவசாய நிலத்தில் பயிர்கள் சாகுபடி செய்யப்படுகிறது. இதில் நெல், கரும்பு, நிலக் கடலை, எள், தர்பூசØணி, மா போன்ற பயிர்கள் அதிக பரப்பளவில் சாகுபடி செய்யப்படுகிறது.

சிறு குறு விவசாயிகள் 63.27 சதவீத அளவில் உள்ளனர். மொத்தம் 22 வட்டாரங்களில் ஏறக்குறைய 18 வட்டாரங்களில் தண்ணீர் உபயோகம் அதிகளவில் உள்ளது. ஏறத்தாழ 4 லட்சத்து 82 ஆயிரம் ஏக்கர் பரப்பளவு மானாவாரி நிலங்களாக உள்ளது. இது படித்த கிராமப்புற இளைஞர்கள் நிறைந்த மாவட்டம். இவை அனைத்தையும் கருத்தில்கொண்டு வேளாண்மை அறிவியல் நிலையம் செயல்பட்டு வருகிறது.

வயல்வெளி ஆய்வுகள் மூலம் இடத்திற்கேற்ற நிலையான நில பயன்பாடு தொழில் நுட்பங்களை கண்டறிதல்.

பல்வகைப்பயிர்களில் செயல்முறை விளக்கத்திடல்களை உழவர்களின் வயல்வெளிகளில் அமைத்து உற்பத்தியின் அளவைக் கண்டறிதல், வேளாண் பெருமக்கள் மற்றும் கிராமப்புற இளைஞர்களுக்கு குறுகிய மற்றும் நீண்டால தொழில் பயிற்சிகளை வழங்குதல் ஆகியவை முக்கிய குறிக் கோள்களாக கொண்டு செயல்பட்டு வருகிறது.

திண்டிவனம் வேளாண் அறிவியல் நிலையம் 42.5 ஏக்கர் பரப்பில் அமைந் துள்ளது. மானாவாரி மற்றும் இறவை சாகுபடியில் நெல், பிற தானியங் கள், பயறு வகைகள், எண் ணெய்வித்துப் பயிர்கள், தோட்டக்கலைப் பயிர்கள் பழ மரங்கள் மற்றும் தீவனப் பயிர்களில் தொழில் நுட்ப

திடல்கள் அமைக் கப்பட்டுள்ளன. காய்கறிப் பயிர் நாற் றுக்கள் மற்றும் பழக் கன்றுகள் உற்பத்திக்காக பனிப் புகைக்கூண்டுகள், நிழல்வலைக்கூடங்கள் உள்ளன. சொட்டுநீர் பாசன விளக் கத்திடல், மண்புழு உரம் தயாரிப்புக் கூடம் மற்றும் காளாண் வளர்ப்புக் கூடம் உள்ளன. ஒருங்கிணைந்த பண் ணையத்திற்கு உகந்த தொட்டில் ஆடு வளர்ப்பு கூடம், கோழி மற்றும் வான்கோழி வளர்ப்புக்கூடங்கள் உழவரகம் கருத் தரங்குகூடம் மற்றும் சிறு நூலகம் உள்ளன. இந்த கட்டமைப்புகள் அனைத் தும் மாவட்ட வேளாண் பெருமக்கள் மற்றும் அதனைச் சார்ந்தோர் பயன் பெறவே அமைக்கப் பட்டுள்ளது. திண்டிவனம் வேளாண் அறிவியல் நிலையம் வேளாண் சமூகத்திற்கும் கிராம மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் வழிகாட்டியாக செயல் பட்டு வருகிறது.

300 ஏக்கர் பரப்பளவில் துல்லிய பண்ணையம் : விழுப்புரம் மாவட்டத்தில 300 ஏக்கர் பரப்பளவில் துல்லிய பண்ணையம் செயல்படுத்தப் பட்டுள்ளது. தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் டாக்டர் முருகபூபதி கூறிதாவது: திண்டிவனம் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் மூலம் தேசிய வேளாண் வளர்ச்சித்திட்டத் தின் கீழ் மாவட்டத்தில 300 ஏக்கர் பரப்பளவில் துல்லிய பண்ணையம் செயல்படுத்தப்படுகிறது. அதன் மூலம் 5 துல்லிய பண்ணை சங்கங்கள் அமைக்கப்பட்டு, 120 சங்க உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு, இதில் 11 நபர்கள் தொழில் நுட்ப பயிற்சியாளர்களாக ஊக்குவிக்கப்பட்டுள்ளனர். இத்திட்டத்தின் மூலம் துல்லிய பண்ணையம் மாவட்டத்தில் பரவலாக்கப்பட்டுள்ளது. திண்டிவனம் வேளாண் அறிவியல் நிலையம் மாவட்டத்தில் நீர்வள நிலவளத்திட்டம், தேசிய தோட்டக்கலை இயக்கம், தேசிய வேளாண் வளர்ச்சித்திட்டம் ஆகியவற்றை முழு மூச்சுடன் செயல்படுத்தி வருகின்றது. இவ்வாறு துணைவேந்தர் டாக்டர் முருகபூபதி கூறினார்.

**சரவணம்பாக்கத்தில் சாமந்தி பூ சாகுபடி**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 29,2010,23:43 IST

திருவெண்ணெய்நல்லூர் : திருவெண்ணெய் நல் லூர் அடுத்த சரவணம்பாக் கம் கிராமத்தில் சாமந்தி பூ அறுவடை துவங்கியது.

சரவணம்பாக்கத்தைச் சேர்ந்த ராஜா தனக்கு சொந் தமான நிலத்தில் 50 செண்ட் அளவில் சாமந்தி பூ செடிகளை பயிரிட்டுள்ளார். கடந்த நான்கு மாதங்களுக்கு முன் நடப்பட்ட செடிகளில் தற்போது ஏராளமான பூக்கள் பூத்துக் குலுங்குகின்றன. அறுவடை செய்யப்பட்ட பூக் களை திருவெண்ணெய் நல்லூர், பண்ருட்டி, திருக் கோவிலூர் போன்ற ஊர்களுக்கு கொண்டு சென்று கிலோ 15 ரூபாய்

என விற்பனை செய்கிறார்.  பண்டிகை காலங்களில் 30 ரூபாய் வரை விலை அதிகரிக்குமென ராஜா தெரிவித்தார்.

**புறா வளர்ப்பு தொழிலில் ஆர்வம் காட்டும் விவசாயி**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 29,2010,23:43 IST

அவலூர்பேட்டை :  செக்கடிக்குப்பம் கிராமத்தில் நாட்டு மருத்துவத்திற்காக விவசாயி ஒருவர் புறா வளர்ப்பு தொழிலில் ஈடுபட்டுள்ளார்.
மேல்மலையனூர் ஒன்றியம் செக்கடிக்குப் பம் கிராமத்தை சேர்ந்தவர் காத்தவராயன்( 60). இவரது விவசாய நிலத்தின் அருகில் கான்கிரீட் பீம் அமைத்துள்ளார். அதன் மேல்பகுதியில் கூண்டு அமைத்து கடந்த நான்கு ஆண்டுகளாக புறாக்களை வளர்த்து வருகிறார். வளர்ப்பு புறாக்கள் காலையில் வெளியே கிளம்பி, மாலை நேரத் தில் மீண்டும் கூண்டிற்கு திரும்புகிறது. நெல், கேழ்வரகு, கம்பு, நீர் ஆகியவை புறாக்களுக்கு தீனியாக வழங்கி வருகிறார்.
கை, கால் முடங்கி போகும் நிலையில் உள்ள லக்குவான் நோயினால் பாதிக்கப்படுபவர்களுக்கு புறா ரத்தம் தேய்ப்பதால் உடலில் உஷ்ணம் ஏற்படும்.    இதனால் நரம்புகள் மீண்டும் செயல்படுவதற்கு புறாவின் ரத்தத்தை செயலிழந்த உடல் பகுதியில் தேய்ப்பதும், உள்ளுக்குள் குடிப்பதும் கிராம மக்களிடம்  உள்ள நாட்டு மருத்துவ முறை. நோயினால் பாதிக்கப் பட்ட பலர் மருத்துவத்திற்காக புறாக்களை வாங் குவதற்கு தினசரி இங்கு வருகின்றனர். ஒரு புறா நூறு ரூபாய் விலையில் விற்கப்படுகிறது. பொதுமக்களின் மருத் துவ தேவைக்காக சேவை மனப்பான்மையுடன் புறா வளர்ப்பு தொழிலில் ஈடுபட்டுள்ளதாக காத்தவராயன் கூறினார்.

**இளைஞர்களுக்கு விவசாய பயிற்சி**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 01,2010,03:48 IST

நாமக்கல்: ""விவசாயத்தில் நிலவும் ஆட்கள் பற்றாக்குறையை போக்குவதற்காக, தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கம் மூலம் இளைஞர்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு நாற்று நடவு உள்ளிட்ட பல்வேறு பயிற்சி அளிக்கப்படுகிறது,'' என, கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் சீனிவாசன் பேசினார்.கிராமப்புறங்களில் விவசாயத்தில் நிலவும் ஆட்கள் பற்றாக்குறை காரணமாக, இத்தொழிலை கைவிடும் நிலைக்கு பெரும்பாலான விவசாயிகள்

தள்ளப்பட்டுள்ளனர். அதற்கு தீர்வு காணும் வகையிலும், வேலைவாய்ப்பை பெருக்கும் நோக்கிலும் கூட்டுறவுத் துறை மூலம் பசுமைப்படை திட்டம் உருவாக்கப்படுகிறது.

தமிழகத்தில் ஈரோடு, விழுப்புரம், கடலூர், தஞ்சாவூர், திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் பசுமைப்படை திட்டம் துவங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், கிராமப் புறங்களில் விவசாயத்தில் ஆர்வம் உள்ள இளைஞர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர். தேர்வு செய்யப்படும் இளைஞர்களுக்கு இயந்திரம் மூலம் நெல் நடவு, இயந்திரம் இயக்குவது, நாற்றங்கால்களை உருவாக்குவது உள்ளிட்ட பயிற்சிகள் வி.எஸ்.டி., எனும் தனியார் நிறுவனம் மூலம் அளிக்கப்படுகிறது.இத்திட்டத்தின் கீழ், நாமக்கல் மாவட்டத்தில் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கம் மூலம் இளைஞர்கள் தேர்வு செய்யப்பட்டு நாற்று நடவு உள்ளிட்ட பயிற்சிகள் அளிக்கப்படுகிறது.

பள்ளிபாளையத்தில் நடந்த பயிற்சி முகாமுக்கு கூட்டுறவு சங்கங்களின் நாமக்கல் மண்டல இணைப்பதிவாளர் சீனிவாசன் தலைமை வகித்து பேசியதாவது:விவசாயத்தில் நிலவும் ஆட்கள் பற்றாக்குறையை போக்குவதற்காக, தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கம் மூலம் பசுமைப்படை இளைஞர்கள் தேர்வு செய்யப்பட்டு பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒரு ஏக்கர் வயலில் இயந்திர நடவு செய்ய 15 முதல் 20 கிலோ விதை நெல் ӧதேவைப்படும். அதே கை நடவுக்கு 30 கிலோ நெல் தேவைப்படும். செம்மை நெல் சாகுபடி முறையில் இன்னும் குறைந்த அளவு விதை நெல் போதுமானது. பள்ளிபாளையத்தில் உள்ள இந்த இயந்திரத்தை விவசாயிகள் வாடகைக்கு பெற்று பயன்படுத்தலாம்.இவ்வாறு அவர் பேசினார்.வேளாண் உற்பத்தியாளர் சங்க தனி அலுவலர் ஆனந்தி, சரகத் துணைப்பதிவாளர் பாண்டியன், வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க மேலாளர் திரவியம், வட்டார கள அலுவலர் ஞானசுந்தரம் உட்பட பலர் பங்கேற்றனர்.

### நடப்பு பருவத்தில் டன்னுக்கு... ரூ.3,000 : கரும்பு விவசாயிகள் கோரிக்கை

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 30,2010,02:44 IST

மோகனூர்: "நடப்பு கரும்பு அரவைப்பருவத்தில் டன் ஒன்றுக்கு 3,000 ரூபாய் வழங்குவதுடன், வெட்டுக்கூலியையும் ஆலை நிர்வாகமே ஏற்றுக்கொள்ள வேண்டும்' என, விவசாயிகள் நலச்சங்க நிர்வாகக்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. விவசாயிகள் நலச்சங்கத்தின் நிர்வாகக்குழு கூட்டம் மோகனூரில் நடந்தது. சங்க மாநிலத்தலைவர் பாலசுப்ரமணியன் தலைமை வகித்தார். செயற்குழு உறுப்பினர் சாமிநாதன் வரவேற்றார். ஒன்றியச் செயலாளர்கள் மோகன்,

முருகேசன், ராஜேந்திரன், விவசாய விளைபொருள் உற்பத்தியாளர் நலச்சங்க தலைவர் பூபாலன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில், மேட்டூர் அணையில் இருந்து வெளியேறும் உபரி நீரை திருமணி முத்தாற்றில் திருப்பிவிட்டு, நாமக்கல் மாவட்டத்தில் உள்ள ஏரி, குளங்களை நிரப்புவதற்கு, தமிழக முதல்வரிடம் வலியுறுத்திய கலெக்டர் சகாயத்துக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இத்திட்டத்தை விரைந்து செயல்படுத்து தமிழக அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். கொல்லிமலையில் நீர் மின் திட்டத்தை செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். மாவட்டத்தில் ஏரி, குளங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி தூர்வார வேண்டும். தமிழகத்தில் 15 ஆண்டு முதல் 20 ஆண்டுகள் வரை மின் இணைப்பு வேண்டி காத்திருப்பவர்களுக்கு உடனடியாக மின் இணைப்பு வழங்க வேண்டும். நடப்பு கரும்பு அரவைப்பருவத்தில் டன் ஒன்றுக்கு 3,000 ரூபாய் வழங்குவதுடன், வெட்டுக்கூலியையும் ஆலை நிர்வாகமே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

பால் கொள்முதல் விலையை குறைந்தபட்சம் எருமைப்பாலுக்கு 30 ரூபாய், பசும்பாலுக்கு 25 ரூபாய் என நிர்ணயம் செய்தும், கால்நடை தீவனத்தின் விலையை கட்டுப்படுத்தவும், மானிய விலையில் தீவனம் வழங்கவும் தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒரு மாதத்துக்கு முன், 14 விவசாயிகள் மீது பொய் வழக்கு பதிவு செய்து சிறையில்அடைத்த நாமக்கல் மாவட்ட போலீஸார், நிபந்தனையின்றி வழக்கை வாபஸ் பெறவேண்டும்.மோகனூர் அடுத்த பாலப்பட்டியில் கோரை கொள்முதல் நிலையமும், நன்செய் இடையாறு பகுதியில் வெற்றிலை கொள்முதல் நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மோகனூர் வாய்க்காலையும், அதை சார்ந்த பள்ள வாய்க்கால் ஆகியவற்றை ரீமாடலிங் செய்து கரைகளை அகலப்படுத்தி வாகனங்கள் சென்று வரும் வகையில் வசதி ஏற்படுத்த வேண்டும் என்பது உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. நிகழ்ச்சியில், மாநிலச் செயலாளர் சந்திரமோகன், பொருளாளர் மனோகரன், கரும்பு பிரிவு செயலாளர் ரமேஷ் உள்பட பலர் பங்கேற்றனர்.

**சொட்டுநீர் பாசனம் அமைக்க65 சதம் அரசு மானியம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 01,2010,03:45 IST

நாமக்கல்: சொட்டுநீர் பாசன முறை அமைக்க தோட்டக்கலைத் துறை மூலம் 65 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது.இதுகுறித்து  உதவி இயக்குனர் ராஜேந்திரன் வெளியிட்ட அறிக்கை:அனைத்து

பயிர்களுக்கும் சொட்டுநீர் பாசனம் மிகவும் ஏற்றது. வாய்க்கால் மூலம் ஒரு ஏக்கர் பாசனம் செய்யும் நீரைக் கொண்டு இரண்டரரை ஏக்கர் வரை சொட்டு நீர் பாசனம் செய்யலாம். களைகளும் கட்டுப்படுத்தப்படும்.

நீர் வழியாக, உரச்சத்துக்களை வேருக்கு அருகில் பாய்ச்சவதால், உரச்சத்து வீணாகாமல் பயிருக்கு கிடைக்கும்.ஒரு முறை நிறுவினால் பல ஆண்டுக்கு பயனளிக்கும். மண் இருகாமல் காற்றோட்டம் உடையதாக இருப்பதால் வேர் வளர்ச்சி நன்றாகவும், செழிப்பாகவும் இருக்கும். செடிகளின் வளர்ச்சி துரிதமாகி மகசூல் அதிகரிக்கும். இத்தகைய சொட்டு நீர் பாசனத்தை அனைத்து விவசாயிகளும் அமைத்து பயன் அடையலாம்.து அனைத்து பயிர்களுக்கும் தோட்டக்கலை துறை மூலம் சொட்டு நீர் பாசனத்துக்கு 65 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது.நாமக்கல் வேளாண் விரிவாக்க மையத்தில் உள்ள தோட்டக்கலை அலுவலகத்தை தொடர்பு கெண்டு 65 சதவீத மானியத்தில் சொட்டுநீர் பாசனம் அமைத்து பயன்பெறலாம்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பயிர் அறுவடை பரிசோதனை முகாம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 30,2010,02:49 IST

நாமக்கல்: புதுச்சத்திரத்தில் பொது பயிர் மதிப்பீட்டாய்வு திட்டத்தின் கீழ், 2010-11ம் ஆண்டுக்கான நிலக்கடலை பயிர் அறுவடை பரிசோதனை முகாம் நடந்தது. வட்டார புள்ளியல் ஆய்வாளர் சுவாமிநாதன் தலைமை வகித்தார். தொடர்ந்து பயிர் அறுவடை பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. மேலும், பயிர்காப்பீட்டு திட்ட பயன்கள் குறித்தும் விளக்கிக் கூறப்பட்டது. துணை வேளாண் அலுவலர் மணி, உதவி வேளாண் அலுவலர் பழனிவேல், வி.ஏ.ஓ., தயாளன் உட்பட பலர் பங்கேற்றனர்.

**திண்டல் ஏரிக்கு தண்ணீர் விட விவசாயிகள் கோரிக்கை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 30,2010,01:43 IST

காரிமங்கலம்: "காரிமங்கலம் அடுத்த திண்டல் ஏரிக்கு கிருஷ்ணகிரி அணையில் இருந்து தண்ணீர் திறந்து விட வேண்டும்' என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
காரிமங்கலம் அடுத்த திண்டல் ஏரிக்கு கால்வாய் மூலம் கிருஷ்ணகிரி அணை உபரி நீரை கொண்டுவர வேண்டும் என விவசாயிகள் பல்வேறு போராட்டங்களை நடத்தினர். இதை தொடர்ந்து 7 கோடி ரூபாய் மதிப்பில் கிருஷ்ணகிரி அணை வலதுபுற கால்வாய் நீட்டிக்கப்பட்டு திண்டல் வரை கால்வாய் வெட்டப்பட்டது.
இத்திட்டத்தின் கீழ் ஜெகதாப், சப்பாணிபட்டி, கரகூர், மொட்டலூர், குட்டூர், கரகப்பட்டி, பந்தாரஅள்ளி, திண்டல் உள்ளிட்ட 25க்கும் மேற்பட்ட ஏரிகளுக்கு தண்ணீர் வரத்து ஏற்பட்டது. இதனால் சுற்றுவட்டார பகுதியை சேர்ந்த ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பாசன வசதியை பெற்றன. மேலும் குடிநீர் தட்டுப்பாடு குறைந்தது. அணை நிரம்பி கடந்த இரு ஆண்டாக செப்டம்பர் மாதத்தில் வலபுற கால்வாயில் உபரி நீர் திறந்து விடப்பட்டது. உபரி நீரால் ஏரிகள் படிப்படியாக நிறைந்து விவசாயத்திற்கு பெரிதும் உறுதுணையாக இருந்து வருகிறது.
இந்த ஆண்டு செப்டம்பர் மாதம் முடிவுறும் நிலையில் தண்ணீர் திறந்து விடப்படாததால் விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர். ஆண்டுதோறும் கிருஷ்ணகிரி அணை நிரம்பி உபரிநீர் திறந்து விடப்படும் நிலையில் "இந்த ஆண்டு அணை நிரம்பாததால் தண்ணீர் திறப்பதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது எனவும் விரைவில் உபரிநீர் கால்வாயில் திறந்து விடப்படும்' என அதிகாரிகள் தெரிவித்தனர். "உரிய நடவடிக்கை எடுத்து திண்டல் ஏரிக்கு கே.ஆர்.பி., அணையில் இருந்து தண்ணீர் திறந்து விட வேண்டும்' என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## அரிசி வரத்து அதிகரிப்பால் ரூ.150 விலை சரிவு

பதிவு செய்த நாள் : அக்டோபர் 01,2010,02:35 IST

ஈரோடு: ஈரோடு அரிசி சந்தைக்கு அரிசி வரத்து அதிகரிப்பு காரணமாக அரிசி விலை மூட்டைக்கு 100 முதல் 150 ரூபாய் வரை குறைந்துள்ளது. மைசூருவில் இருந்து வரத்தாகும் "காவிரி சோனா' என்ற புதிய ரக அரிசி மூட்டை 1,550 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.ஈரோடு சுற்று வட்டாரத்தில் கொடிமுடி, காங்கேயம், வெள்ளகோவில், கோபி உள்ளிட்ட பகுதியை சேர்ந்த அரிசி வியாபாரிகள், பி.பி., அக்ரஹாரம் அரிசி சந்தையில் அரிசி விற்பனை செய்கின்றனர். அரிசி வரத்து அதிகரிப்பு காரணமாக, சந்தையில் அரிசி விலை மூட்டைக்கு 100 முதல் 150 ரூபாய் வரை குறைந்துள்ளது.

அரிசி மொத்த வியாபாரிகள் கூறியதாவது:ஈரோடு மாவட்டத்தில் 50க்கும் மேற்பட்ட நெல் அரவை மில்கள் உள்ளன. தமிழகம், ஆந்திரா, கர்நாடகா பகுதியில் நெல் கொள்முதல் செய்து, அரவை மில்லுக்கு கொண்டு வரப்படுகிறது.தமிழகத்தில் கள்ளக்குறிச்சி, ஆத்தூர், திருச்சி, வெள்ளகோவில், காங்கேயம் மற்றும் ஈரோட்டை சுற்றியுள்ள பகுதிகளில் இருந்தும், தஞ்சையில் இருந்து ஐ.ஆர்.20, அதிசய பொன்னி, பி.பி.டி. ஆகிய ரகங்கள், கர்நாடக மாநிலத்தில் இருந்து டீலக்ஸ் பொன்னி ரகம் கொள்முதல் செய்யப்படுகிறது. இதுதவிர, ஆந்திர மாநிலத்தில் இருந்தும் தமிழகத்துக்கு அரிசி கொள்முதல் செய்யப்படுகிறது.

ஐ.ஆர்., 20, பொன்னி, அதிசய பொன்னி, டீலக்ஸ் பொன்னி, கல்லமுத்தான் இட்லி அரிசி, சி.ஆர். 1009 இட்லி அரிசி ஆகியவற்றை இங்குள்ள மக்கள் அதிகமாக வாங்கிச் செல்கின்றனர். புதிய ஏடிடி-36 ரக அரிசியை அதிகமாக யாரும் வாங்குவது கிடையாது. பாஸ்மதி மற்றும் ஜீரகசம்பா அரிசியின் விலை அதிகமாக இருப்பதால் முக்கிய விசேஷங்களுக்கு மட்டும் பொதுமக்கள் பயன்படுத்துகின்றனர். இந்த ரக அரிசியை சில்லரையாகவே வாங்கிச் செல்கின்றனர்.புரட்டாசி அறுவடை காரணமாக அரிசி மார்க்கெட்டுக்கு சில நாட்களாக அரிசி வரத்து தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

அரிசி வரத்து அதிகரிப்பு காரணமாக மூட்டைக்கு 100 முதல் 150 ரூபாய் வரை குறைந்துள்ளது. தற்போது 75 கிலோ மூட்டை ஐ.ஆர்.20 ரகம் 1,300 முதல் 1,400 ரூபாய், அதிசய பொன்னி 1,400 முதல் 1,500 ரூபாய், பி.பி.டி., ரகம் பொன்னி 1,950 ரூபாய் முதல் 2,000 ரூபாய், கர்நாடகா டீலக்ஸ் 2,300 முதல் 2,400 ரூபாய், இட்லி அரிசி 1,500 முதல் 1,600 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.மைசூரில் பகுதியில் இருந்து வரத்தாகும் "காவிரி சோனா' என்ற ரக அரிசி கர்நாடகா டீலக்ஸ் அரிசியை போன்று இருக்கிறது. 75 கிலோ மூட்டை 1,550 ரூபாய் மட்டுமே. இந்த ரக அரிசியை சில வியாபாரிகள் கர்நாடகா பொன்னி அரிசி என கூறி விற்கின்றனர்.மக்கள் ஏமாந்து, கர்நாடகா பொன்னி அரிசி விலை குறைவு என தெரிவிக்கின்றனர். காவிரி சோனா அரிசிக்கும், கர்நாடகா டீலக்ஸ் அரிசிக்கும் ஏராளமான வேறுபாடு உள்ளது. கர்நாடகா டீலக்ஸ் அரிசியை தரமானதாக மக்கள் வாங்க வேண்டும்.இவ்வாறு அவர்கள் கூறினர்.

**மஞ்சள் மார்க்கெட்டில் ஏலம் துவக்கம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 01,2010,02:39 IST

ஈரோடு: ஈரோடு ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் மஞ்சள் வரத்து அதிகரித்ததால், நிறுத்தி வைக்கப்பட்ட ஏலம் நேற்று மீண்டும் துவங்கியது.ஈரோடு ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு மாவட்டத்திலிருந்தும், வெளி மாவட்டத்திலிருந்தும் அதிகளவில் மஞ்சள் வரத்தாகிறது. ஆன் லைன் வர்த்தகத்தால் மஞ்சள் விலை 15 ஆயிரத்தை தாண்டி ஏலம் போனது. இதனால், மாவட்ட விவசாயிகள் தவிர, மற்ற மாவட்ட விவசாயிகளும் மஞ்சள் பயிரை விரும்பி பயிரிட்டு வருகின்றனர்.மூன்று மாதத்துக்கு முன், ஒரு குவிண்டால் 15 ஆயிரத்துக்கும் மேல் ஏலம் போனது. தற்போது விலை குறைந்து 14 ஆயிரத்து 500 வரை ஏலம் கோரப்படுகிறது.

இரு தினங்களுக்கு முன் 3 ஆயிரத்து 500 மூட்டைக்கு மேல் வரத்தானது. வரத்து அதிகமானதால் எடையாளர்கள் எடை போட முடியாத கடுமையான சூழ்நிலை உருவானது. மேலும், எடை போடாத மூட்டைகளை நேற்று முன் தினம் எடை போட வேண்டிய சூழ்நிலை உருவானது.நேற்று முன்தினம் விற்பனைக் கூடத்தில் ஏலம் நிறுத்தப்பட்டது. நிறுத்தி வைக்கப்பட்ட மூட்டைகளுக்கு எடை போட்டு முடிக்கப்பட்ட நிலையில், நேற்று மீண்டும் ஏலம் துவங்கியது.நேற்றைய நிலவரப்படி, 1,176 மூட்டைகள் வரத்தானது. 1,121 மூட்டைகள் ஏலம் போனது. விரலி அதிகபட்சமாக 14 ஆயிரத்து 19 ரூபாய், கிழங்கு அதிகபட்சம் 14 ஆயிரத்து 17 ரூபாய்க்கு ஏலம் போனது.

**விதை கோதுமை விற்பனைக்கு தயார்:வேளாண் பல்கலை தகவல்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 01,2010,03:50 IST

கோவை":தமிழ்நாடு வேளாண் பல்கலையில் உயர் விளைச்சல் ரகங்களான கோ டபிள்யூ1 மற்றும் 2 விதை கோதுமை விற்பனைக்கு உள்ளது. வேளாண் பல்கலை சிறுதானிய துறை தலைவர் வீரபத்திரன் கூறியதாவது:தமிழகத்தில் நீலகிரி, கோவை, திருப்பூர், ஈரோடு, திண்டுக்கல், தேனி, சேலம், கரூர், தர்மபுரி, கிருஷ்ணகிரி, வேலூர், திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் கோதுமை சாகுபடியாகிறது. சப்பாத்தி மற்றும் ரொட்டி செய்ய கோ டபிள்யூ 1 மற்றும் 2 ஆகிய ரகங்கள் ஏற்றதாக உள்ளன. அதிக விளைச்சலை பெற கோதுமையை அக்., 15 முதல் நவ., 4ம் தேதிக்குள் விதைக்க வேண்டும். ஏக்கருக்கு 40 கிலோ விதை கோதுமை தேவைப்படும்.கோதுமை பயிருக்கு குறைந்த நீர் போதும்; 110 நாட்கள் வயதுடையவை. எக்டேர் ஒன்றுக்கு 4000 முதல் 5500 கிலோ விளைச்சல் கிடைக்கும். நஷ்டம் ஏற்படுத்தக்கூடிய பூச்சி மற்றும் நோய் தாக்குதல் இல்லை. கோதுமையின் தேவை அதிகரிப்பதால், சந்தையில் நல்ல விலை கிடைக்கும். குறைந்த இடுபொருள் போதும். சமவெளிப்பகுதிகளிலும் கோதுமையை சாகுபடி செய்யலாம்.மேலும் விபரங்களுக்கு, "பேராசிரியர் மற்றும் தலைவர், சிறுதானியத் துறை,

தமிழ்நாடு வேளாண்மை பல்கலை, கோவை - 641 003 என்ற முகவரியிலும், 0422 - 245 0507 என்ற எண்களில் அறியலாம்.இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**425 மூட்டை பருத்தி வரத்து**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 01,2010,03:26 IST

அவிநாசி:அவிநாசியில் நடந்த பருத்தி ஏலத்துக்கு 425 மூட்டை வரத்தாக இருந்தது; இந்த வாரமும் டி.சி.எச்., ரகம் வரத்தில்லை.அவிநாசி வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த பருத்தி ஏலத்துக்கு இந்த வாரம் 425 மூட்டை (125 குவிண்டால்) வரத்தாக இருந்தது. இது கடந்த வாரத்தை காட்டிலும் 50 மூட்டை குறைவு; இந்த வாரமும் டி.சி.எச்., பருத்தி வரத்தில்லை. ஏலத்தில் ஆர்.சி.எச்., ரகத்துக்கு நல்ல விலை கிடைத்தது.
இந்த வார ஏலத்தில் அனைத்து ரக பருத்தி விலை விபரம் (குவிண்டாலுக்கு) வருமாறு:எல்.ஆர்.ஏ., ரூ.3,600 முதல் ரூ.4,180 வரை, ஆர்.சி.எச்., மற்றும் பென்னி ஆகியன ரூ.3,900 முதல் ரூ.4,390 வரை, சுரபி மற்றும் எம்.சி.யு., 5 ரூ.4,100 முதல் ரூ.4,550 வரை, மட்டம் ரூ.1,800 முதல் ரூ.1,950 வரை.கூட்டுறவு விற்பனை சங்க தனி அலுவலர் பழனிசாமி கூறியதாவது:இந்த வாரம் வரத்து சற்று குறைந்திருந்தாலும் கூட, ஆர்.சி.எச்., மற்றும் சுரபிக்கு நல்ல விலை கிடைத்தது. தற்போது, டி.சி.எச்., ரகம் சீசன் இல்லாததால் வரத்தில்லை. இந்த வாரம் ரூ.5.05 லட்சத்துக்கு வர்த்தகம் நடந்தது. பென்னாகரம், சத்தியமங்கலம், கோபிச்செட்டிபாளையம், திங்களூர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 25 விவசாயிக ள் ஏலத்தில் பயனடைந்தனர், என்றார்.வாழைக்காய் ஏலம் துவக்கம்: அவிநாசி வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், இந்தாண்டு சீசனுக்கான வாழைக்காய் ஏலம் துவங்கியுள்ளது. 1,200 தார் நேந்திரன் மற்றும் கதலி ரக வாழை வரத்தாக இருந்தது. நேந்திரன் ரகம் கிலோவுக்கு ரூ.21 முதல் ரூ.26.20 வரை, கதலி ரகம் ரூ.25க்கும் ஏலத்தில் எடுக்கப்பட்டது.

**பச்சை மிளகாய் விலை கடும் சரிவால் விரக்தி: வேதனையில் துவள்கின்றனர் விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 29,2010,22:57 IST

பல்லடம் : பச்சை மிளகாய் கொள்முதல் விலை கிலோ ஏழு ரூபாய் என சரிந்ததால், பல்லடம் மற்றும் சுல்தான்பேட்டை வட்டார விவசாயிகள் கண்ணீர் வடிக்கின்றனர்.
பல்லடம், சுல்தான்பேட்டை வட்டாரங் களில் 1,000 ஏக்கர் பரப்பளவில் பாலிஸ்டர், தேனிசம்பா,

உருண்டை, "ஹைபிரட்' ரக பச்சை மிளகாய் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. நாற்றங்காலிட்டு சாகுபடி செய்யப்படும் பச்சை மிளகாய் 70 நாளில் காய்ப்புக்கு வருகிறது.

காய்ப்பு துவங்கியதில் இருந்து தொடர்ந்து ஆறு மாதத்துக்கு பலன் கொடுக்கிறது. ஒரு ஏக்கர் மிளகாய் சாகுபடிக்கு ரூ.40 ஆயிரம் செலவாகிறது. 15 நாட்களுக்கு ஒருமுறை செடிகளில் இருந்து மிளகாய் பறிக்கப்படுகிறது. ஏக்கருக்கு ஒரு மாதத்தில் 2,500 கிலோ பச்சை மிளகாய் வரை மகசூல் கிடைக்கிறது.  கடந்த வாரம், ஒரு கிலோ பச்சை மிளகாய் விவசாயிகளிடம் இருந்து ரூ.12க்கு வியாபாரிகள் கொள்முதல் செய்தனர்.

தற்போது, கிலோவுக்கு ஐந்து ரூபாய் சரிந்து ஏழு ரூபாயாக கொள்முதல் விலை உள்ளது. கொள்முதல் விலை சரிவு, பல்லடம் மற்றும் சுல்தான்பேட்டை வட்டார விவசாயிகளை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது. ஒரு கிலோ மிளகாய் பறிப்பு கூலியே மூன்று ரூபாயாக இருப்பதால், கொள்முதல் விலை ஏழு ரூபாயாக இருப்பது விவசாயிகளை வேதனையில் துவள வைத்துள்ளது.

தொடர்ந்து, இக்கொள்முதல் விலையே நீடித்து வந்தால் செடிகளில் இருந்து மிளகாய் பறிக்கவா அல்லது அப்படியே செடிகளில் விட்டு விடலாமா என்ற எண்ணத்துக்கு தள்ளப் பட்டு விடுவோம் என மிளகாய் விவசாயிகள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

ஜல்லிப்பட்டியை சேர்ந்த பச்சை மிளகாய் விவசாயி செல்வராஜ் கூறியதாவது: கடந்த மாதம், ஒரு கிலோ பச்சை மிளகாய் கொள்முதல் விலை ரூ.30 ஆக இருந்தது. இவ்விலை சிறிது, சிறிதாக சரிந்து கடந்த வாரம் கிலோ ரூ.12 ஆக இறங்கியது. மிளகாய் விலை கடுமையாக உயர்ந்திருந்த போது, செடியில் மிளகாய் அதிகம் இல்லை. தற்போது கொள் முதல் விலை தலைகீழாக சரிந்துள்ளது;  செடிகளில் மிளகாய் விளைச்சல் அமோகமாக உள்ளது.

பச்சை மிளகாய் கொள்முதல் விலை குறைந்தபட்சம் கிலோ ரூ.15 ஆக இருந்தால் மட்டுமே பறிப்பு செலவு, திருப்பூர், கோவை, கேரளாவுக்கு விற்பனைக்கு கொண்டு செல் லும் செலவுக்கு கட்டுப்படியாகும். இவ்விலை இல்லாத பட்சத்தில் கடும் நஷ்டம் ஏற்படும் . மிளகாய் விலை சரிவுக்கு வரத்து அதிகம் என வியாபாரிகள் காரணம் கூறுகின்றனர்.

சில நேரங்களில் வியாபாரிகளின் கொள் முதல் முடிவும் கொள்முதல் விலை வீழ்ச்சிக்கு காரணமாக அமைகிறது. மிளகாயை பறிக்காமல் வற்றலுக்காக விட்டு விட்டால், காய்ப்பு குறைந்து விடும். அதன் காரணமாகவே முழுமையாக பறிப்பு வேலைகளில் ஈடுபட வேண்டியுள்ளது. இவ்வாறு, விவசாயி செல்வராஜ் தெரிவித்தார்.

**தேயிலைத் தோட்டங்களில் ஈரப்பதம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 01,2010,03:10 IST

மஞ்சூர்:மஞ்சூர் சுற்றுவட்டாரத்தில் பொழியும் மழையால், தேயிலைத் தோட்டங்களுக்கு தேவையான ஈரப்பதம் கிடைத்துள்ளது.மஞ்சூர் சுற்றுவட்டாரப் பகுதிகளில், தேயிலைத் தொழில் பிரதானமாக மேற்கொள்ளப்படுகிறது; இங்குள்ள கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளில், 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உறுப்பினர்களாக உள்ளனர். கடந்த ஜனவரி மாதத்திலிருந்து போதிய மழை பெய்யாததால், பசுந்தேயிலை வரத்து குறைந்தது; சிலந்திப் பூச்சி தாக்குதலும் அதிகரிக்க துவங்கியதால், விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். கடந்த 3 நாட்களாக, மஞ்சூர் சுற்றுவட்டாரப் பகுதிகளில் பரவலாக மழை பெய்து வருகிறது. தேயிலைச் செடிகளுக்கு போதிய ஈரப்பதம் கிடைத்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்து, தோட்டங்களை பராமரிக்க தயாராக உள்ளனர். தேயிலைத் தோட்டங்களுக்கு தேவையான உரங்களை, சம்பந்தப்பட்ட துறையினர் விரைவில் வழங்க வேண்டும் என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**தொடர் மழையால் விவசாயப்பணிகள் மும்முரம் மாவட்டம் முழுவதும் நெல்நடவு தீவிரம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 01,2010,01:11 IST

வத்திராயிருப்பு : பருவமழை தீவிரமடைந்து வருவதை தொடர்ந்து மாவட்டம் முழுவதும் விவசாயப்பணிகள் மும்முரமாக நடந்து வருகிறது. நெல் நாற்று நடவு பணிகளில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.இந்த ஆண்டுக்கான பருவமழை ஒருமாதம் தாமதமாக துவங்கியுள்ளது. கடந்த 15 நாட்களாக அவ்வப்போது பெய்துவந்த மழை தற்போது தீவிரமடைந்து வருவதை தொடர்ந்து மாவட்டத்தில் விவசாயப்பணிகள் மும்முரமாக நடந்து வருகிறது.

ராஜபாளையம், சேத்தூர், தளவாய்புரம், ஸ்ரீவி., வத்திராயிருப்பு ஆகிய பகுதிகளில் சுமார் 25 ஆயிரம் ஏக்கர்களுக்கு மேல் நெல், கரும்பு, பருத்தி உள்ளிட்ட நஞ்சை விவசாயமும், அருப்புக்கோட்டை, திருச்சுழி, காரியாபட்டி, சிவகாசி, சாத்தூர் பகுதிகளில் மக்காச்சோளம், கம்பு, பயறு வகை உள்ளிட்ட புஞ்சை விவசாயமும் நடந்து வருகிறது.தொடர் மழை காரணமாக தற்போது நெல் நடவுக்கு ஏற்ற நேரம் என்பதால், விவசாயிகள் நடவுப்பணிகளில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

மழை தாமதமாக துவங்கியதால் மழைக்காக காத்திருந்த கண்மாய் பாசன விவசாயிகள் மழைநீர் வடிவதற்குள் விவசாயப்பணிகளை முடிக்க வேண்டும் என அவசரமாக பணிகளை செய்து வருகின்றனர்.அதேபோல் கிணற்றுப்பாசன விவசாயிகள் மழையில் பணிகளை செய்தால்

சிரமப்பட்டு நிலங்களுக்கு நீர்பாய்ச்ச வேண்டிய அவசியம் இல்லை எனக் கருதி அவர்களும் இச்சமயத்தை பயன்படுத்தி நடவு பணிகளை செய்துவருகின்றனர். இரு தரப்பு விவசாயிகளும் ஒரே நேரத்தில் பணிகளை துவக்கியுள்ளதால் கூலியாட்கள் கிடைப்பதிலும், உழவுக்கு டிராக்டர், மாடுகள் கிடைப்பதில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

**பிசான நெல் நாற்றங்கால்வேளாண் அதிகாரி விளக்கம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 30,2010,02:11 IST

நான்குநேரி:பிசான நெல் நாற்றங்கால் தயாரித்தல் குறித்து நான்குநேரி வேளாண் அதிகாரி விவசாயிகளுக்கு அறிவுரை வழங்கியுள்ளார்.நான்குநேரி வட்டாரத்தை சார்ந்த பிசான நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு வேளாண்மை உதவி இயக்குநர் குமாரசாமி தெரிவித்திருப்பதாவது:பிசான நெல் நாற்றங்கால் ஒரு ஏக்கர் நடவு செய்திட தேவையான 8 சென்ட் நிலத்தினை நான்றாக உழவு செய்து 400 கிலோ தொழுஉரம் அல்லது கம்போல்ட் உரம் இடவேண்டும். நாற்றங்காலில் சீராக பரப்பி சேறு கலக்க வேண்டும். கடைசி உழவிற்கு முன் சென்டுக்கு 2 கிலோ டிஏபி உரமிட வேண்டும் அல்லது 7 கிலோ யூரியாவுடன் 48 கிலோ சூப்பர் பாஸ்பேட் உரம் கலந்து இடவும்.20-25 நாட்களுக்குள் நாற்று பறித்திட இயலாது என்றால் மட்டுமே நாற்று பறிப்பதற்கு 10 நாட்களுக்கு முன் டிஏபி இடவேண்டும். களிமண் பகுதிகளில் நாற்று பறிப்பதற்கு 10 நாட்களுக்கு முன் சென்டுக்கு 1 கிலோ டிஏபி இடவேண்டும். யூரியா + 48 கிலோ சூப்பர் பாஸ்பேட் இட்டபின் முளை கட்டிய வகையினை சீராக பரப்பி லேசாக தண்ணீர் கட்டி வைத்திருந்து பராமரிக்கவும் என விவசாயிகளை கேட்டுள்ளார்.பிசான நெல் நாற்றங்கால் நீர் பராமரிப்பு குறித்து அவர் கூறுகையில், தயார் செய்யப்பட்ட 8 சென்டினை 1 சென்டாக தனியாக பிரித்து வைத்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு சென்ட் நாற்றங்காலுக்கும் 2 கிலோ வீதம் விதை விதைக்க வேண்டும். சிறிதளவு தண்ணீர் நிறுத்தி அதில் முளை கட்டிய விதைகளை சீராக விதைக்கவும். நாற்றங்கால் தண்ணீர் நிறுத்தினால் முளைப்பு பாதிக்கப்படும்.

விதைத்த 18-24 மணி நேரத்திற்கு பிறகு தண்ணீரை வடிக்கவும். எங்காவது தண்ணீர் தேங்கி நின்றால் வாய்க்காலில் வடித்து விடவும். 3-5நாட்கள் வரை போதுமான மண் ஈரம் இருக்குமாறு தண்ணீர் விடவும். 5வது நாளில் நீரின் அளவை அதிகபடுத்த நாற்றங்கால் உயரத்தை அனுசரித்து 1.5 செ.மீ. உயரத்திற்கு நீர் கட்டவும். பிறகு 2.5 செ.மீ. உயரத்திற்கு நீர் நிறுத்தவும். இவ்வாறு நாற்றங்கால் நீர் பராமரித்து நெல் விவசாயிகள் பலனடைய அவர் கேட்டுக்

கொண்டுள்ளார்.பிசான நெல் விதைநேர்த்தி குறித்து அவர் கூறுகையில், நெல் விதைகளை விதைப்பதற்குமுன் விதைநேர்த்தி செய்து விதைப்பது அவசியம். ஒரு கிலோ விதைக்கு சூடோமோனாஸ் 10 கிராம் வீதம் உயிரியல் பூஞ்ஞான மருந்தினை 1 லிட்டர் நீரில் கலந்து 24 மணி நேரம் வைத்திருந்து பின் விதைகளை முளை கட்ட வேண்டும். விதைக்குமுன் ஒரு ஏக்கர் தேவையான விதைகளை 2 பொட்டலம் அசோஸ்பைரில்லம் மற்றும் 2 பொட்டலம் பாஸ்போபாக்டிரியா நுண்ணுயிர் உரங்கள் கலந்து பின் விதைப்பு செய்ய வேண்டும்.இவ்வாறு விதை நேர்த்தி செய்து விதைப்பதால் விதை மூலம் பரவக்கூடிய நோய்களான குலைநோய், இலைபுள்ளி நோய் கட்டுபடுகிறது. விண்ணிலுள்ள தழைச்சத்தினை கிரகித்து வேர்மூலம் கிரகித்து பயிர்களுக்கு முழு அளவில் கிடைத்திட நுண்ணுயிர் செயல்படுகிறது. இதனால் மகசூல் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. எனவே விவசாயிகள் விதைநேர்த்தி செய்து நாற்றங்கால் தயார் செய்திட நான்குநேரி வேளாண்மை உதவி இயக்குனர் குமாரசாமி கேட்டுக் கொண்டுள்ளார்.

**நெற்பயிர்களை தாக்கும் பூச்சிகள்தடுக்க அதிகாரி யோசனை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 29,2010,02:37 IST

அம்பாசமுத்திரம்:பிசான சாகுபடியில் நெல் பயிரில் தாக்கும் பூச்சிகளை கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகளை விவசாயிகளுக்கு வேளாண்மை துறையினர் தெரிவித்துள்ளனர்.இதுகுறித்து அம்பாசமுத்திரம் வேளாண்மை உதவி இயக்குனர் மகாலிங்கம் கூறியுள்ளதாவது:நெல் பயிரில் கார் பருவத்தில் தாக்கிய குருத்துப் பூச்சிகள் பிசான பருவத்திலும் தாக்க வாய்ப்புள்ளது. ஆரம்பகட்ட நடவடிக்கையின் மூலம் இதன் பாதிப்பை குறைக்கலாம். அறுவடையின் போது அடித்தூரை அதிக உயரம் விடாமல் தரையோடு அறுவடை செய்ய வேண்டும்.

அறுவடை முடிந்தவுடன் உழவு செய்ய வேண்டும். இதன் மூலம் குருத்துப்பூச்சி, துங்ரோ வைரஸ் நோயை பரப்பும் பச்சை தத்துப்பூச்சி ஆகியவற்றின் கூட்டுப் புழுக்கள் அழிக்கப்படுகின்றன. ஆனைக்கொம்பன் ஈ, இலை சுருட்டுப்புழு, கதிர்நாவாய்ப்பூச்சியின் வாழ்விடங்களான வரப்புகளை சுற்றியுள்ள களைகள், புல் பூண்டுகளை முற்றிலும் அழித்து விட வேண்டும்.எட்டு அடிக்கு ஒரு அடி பட்டம் விட்டு வரிசை நடவு அல்லது 25 செ.மீ.,க்கு 25 செ.மீ., இடைவெளி விட்டு செம்மை நெல் சாகுபடி செய்வதன் மூலம் புகையான், இலை சுருட்டுப்புழுக்களின் இன பெருக்கத்தை குறைக்கலாம். தழைச்சத்தை பல தடவைகளாக பரிந்துரைப்படி பிரித்து இட வேண்டும்.

அடியுரமாக இடப்படும் தழைச்சத்துடன் வேப்பம் பிண்ணாக்கை கலந்து இட வேண்டும். இதன் மூலம் பூச்சி நோய்களை கட்டுப்படுத்துவதோடு, தழைச்சத்து ஒரே சீராக கிடைத்திட செய்யலாம்.

2 முதல் 3 நாட்கள் நீரை வடித்து வைப்பதன் மூலம் கூண்டுப் புழுவை இறக்க செய்திடலாம். அடிக்கடி நீரை வடித்து பாய்ச்சுவதன் மூலம் புகையான் தாக்குதலை தவிர்க்கலாம். விளக்கு பொறி, இன கவர்ச்சி பொறி வைப்பதன் மூலம் பூச்சிகளின் நடமாட்டத்தை கண்காணிக்கலாம்.இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**ஊடுபயிர்களால்" கூடுதல் லாபம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 01,2010,00:00 IST




சேலம்: கூடுதல் லாபம் பெறுவதற்காக விவசாயிகள் மத்தியில் ஊடுபயிர் திட்டத்தை வேளாண்மை துறை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த வகையில், சேலம் மாவட்டம் கொளத்தூர் வட்டாரத்தில் செம்மை நெல் பயிரிட்ட விவசாயிகளிடம், வயலின் வரப்பில் உளுந்து பயிரிட்டால் கூடுதல் லாபம் பெறலாம் என்று வேளாண் அதிகாரிகள் ஆலோசனை கூறியுள்ளனர். "நெல் நாற்று நடவு செய்யும் நேரத்தில் வரப்பில் உளுந்து சாகுபடி செய்ய வேண்டும். நெல்லுக்கு செல்லும் நீர் உளுந்து செடிகளுக்கும் கிடைக்கும். இதனால் உளுந்து செடிகளும் செழிப்பாக வளரும். ஒரு ஏக்கர் நிலத்தில் உள்ள வரப்பில் உளுந்து சாகுபடி செய்தால் 75 கிலோ உளுந்து கிடைக்கும். தற்போது ஒரு கிலோ உளுந்து 50 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. வரப்பில் உளுந்து சாகுபடி செய்வதால் விவசாயிகளுக்கு நான்காயிரம் ரூபாய் வரை கூடுதலாக லாபம் கிடைக்கும்' என்கின்றனர் அதிகாரிகள்.

**பூசணிக்காய்" - டன் ரூ.5 ஆயிரம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 01,2010,00:00 IST



கடலூர்: சிறுபாக்கம், வேப்பூர், மக்களூர், வடபாதி, நரையூர், வேப்பூர், விளம்பாவூர் உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த, நீர் பாசன விவசாயிகள் கடந்த சில ஆண்டுகளாக, தங்களின் விளை நிலத்தின் ஒரு பகுதியில் காய்கறி பயிரிடுவதில் ஆர்வம் காட்டி வந்தனர். மிகக்குறுகிய கால பயிர்களான காய்கறிகளில் போதிய வருவாய் கிடைத்து வருவதால் விவசாயிகள், காய்கறி பயிரிடுவதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பு, தங்கள் நிலங்களில் பூசணிக்காயை பயிரிட்டனர். நன்கு விளைந்த பூசணிக்காய்கள் அறுவடை செய்யப்பட்டு புரோக்கர்கள் மூலம் டன் ஒன்று  ஐந்தாயிரம் ரூபாய்க்கு வாங்கப்படுகிறது. பின்னர், இவை சென்னை, கோவை, பெங்களூரு போன்ற பெரிய நகரங்களுக்கு விற்பனைக்காக அனுப்பி வைக்கப்படுகின்றன. பூசணி சாகுபடியின் மூலம், குறைந்த அளவு செலவு செய்து குறுகிய காலத்தில் விவசாயிகள் அதிக லாபம் பார்க்க முடிகிறது.

தினத் தந்தி

## *கோகோ விலை அதிகரிப்பால் சாக்லெட் விலை உயர வாய்ப்பு*

*பி கே கிருஷ்ணகுமார்*

*கொச்சி*

இந்தியாவில் கோகோ விலை அதிகரித்துள்ளதால் சாக்லெட் விலை உயர வாய்ப்புள்ளது. பண்டிகை காலம் நெருங்கியுள்ள நிலையில், கோகோ பயன்பாடு அதிகரிக்க உள்ளது. எனவே கோகோ விலை மேலும் உயரும் நிலை உள்ளது.

சர்வதேச சந்தையில்...

எனினும் சர்வதேச சந்தையில் கோகோ விலை குறைந்துள்ளது. சாக்லெட் நிறுவனங்கள், உள்நாட்டில் எந்த அளவு கோகோவை கொள்முதல் செய்கின்றனவோ அதே அளவை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்கின்றன. மேலும் இறக்குமதி செய்யப்படும் கோகோ உள்நாட்டு கோகோவை விட விலை குறைவாக உள்ளதால் சாக்லெட் நிறுவனங்கள் மேலும் அதிகமாக வெளிநாடுகளில் இருந்து கோகோவை வாங்கவும் தயாராகி வருவதாக இத்துறையைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்.

இறக்குமதியை அதிகம் சார்ந்திருக்கும் நிறுவனங்கள், சாக்லெட் விலையை உயர்த்துவதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவு. உள்நாட்டு கோகோவை நம்பியிருக்கும் நிறுவனங்களுக்குத்தான் செலவினம் அதிகரித்துள்ளது. எனவே இறக்குமதியை சார்ந்திருக்காத நிறுவனங்கள்தான் சாக்லெட் விலையை உயர்த்த உள்ளன.

கேம்ப்கோ

உதாரணமாக, கேம்ப்கோ நிறுவனம் கோகோவை இறக்குமதி செய்வதில்லை. இந்நிறுவனம் மூன்று மாதங்களுக்கு முன்னால் சாக்லெட்டுகளின் விலையை 10 முதல் 15 சதவீதம் வரை உயர்த்தியது. கோகோ கொட்டைகளை இறக்குமதி செய்யாத போதிலும், இந்நிறுவனம் ஆண்டுக்கு சுமார் 800 டன் கோகோ தூளை இறக்குமதி செய்கிறது. கோகோ தூளின் விலை மிகவும் அதிகமாகவே உள்ளது என கேம்ப்கோவின் நிர்வாக இயக்குனர் ஏ.எஸ்.பட் தெரிவித்தார். இந்நிறுவனத்திற்கு ஆண்டுக்கு 4,000 டன் கோகோ கொட்டைகள் தேவைப்படுகிறது.

காட்பரி இந்தியா

சாக்லெட் தயாரிப்பில் முன்னணி நிறுவனமான காட்பரி இந்தியா, ஆண்டுதோறும் உள்நாட்டிலிருந்து 10,000 டன் கோகோ கொட்டைகளை வாங்குகிறது. இதற்காக அதிகம் செலவிட்டு வந்தாலும் இந்நிறுவனம் மூலப்பொருள் செலவினத்தை இதுவரை நுகர்வோர் மீது சுமத்தவில்லை.

இந்நிலையில், சென்ற ஆகஸ்டு மாதத்தில் தொடங்கிய இரண்டாவது அறுவடை பருவத்தில் கோகோ விளைச்சல் நிலவரம் திருப்திகரமாக இல்லை. இதனால் விலை உயர்ந்து வருகிறது. எனவே சாக்லெட்டுகளின் விலையை உயர்த்துவது குறித்து இனி ஆலோசிக்க வேண்டியிருக்கும் என காட்பரி இந்தியா நிறுவன வட்டாரங்கள் தெரிவித்தன.

## உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம் 16.44%–ஆக உயர்வு



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம் செப்டம்பர் 18–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் 0.98 சதவீதம் அதிகரித்து 16.44 சதவீதமாக உயர்ந்துள்ளது. முந்தைய வாரத்தில் இது 15.46 சதவீதமாக இருந்தது.

சென்ற ஜூலை மாதத்திலிருந்து ஆகஸ்டு மாதத்தின் இடைப்பகுதி வரை சற்று குறைந்து இருந்த உணவு பணவீக்க விகிதம், கடந்த ஐந்து வாரங்களாக தொடர்ந்து உயர்ந்து வருகிறது. நாட்டில் பல பகுதிகளில் ஏற்பட்டுள்ள வெள்ளத்தால், உணவு பொருள்கள் விநியோகம் பாதிக்கப்பட்டதே இதற்கு காரணமாகும்.

சென்ற ஆண்டின் இதே காலத்துடன் ஒப்பிடும்போது, பருப்பு வகைகள் மற்றும் அரிசி விலை முறையே 5.94 சதவீதம் மற்றும் 4.05 சதவீதம் உயர்ந்துள்ளது. பால் விலை 24.32 சதவீதமும், கோதுமை விலை 9.14 சதவீதமும் அதிகரித்துள்ளது. பழங்கள் விலை 15.13 சதவீதம் உயர்ந்துள்ளது.

வெங்காயம் விலை 1.39 சதவீதம் உயர்ந்துள்ள நிலையில், உருளைக்கிழங்கு விலை 50.48 சதவீதம் குறைந்துள்ளது.